# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை 05.11.2024 | கதிர் 408



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## யாழ்ப்பாணத்தில்

# தேசிய மக்கள் சக்திக்குள் குழப்பம் ஆதரவாளர்கள் அதிருப்தி-ஆவேசம்!

**கிளிநொச்சி, நவ. 05**

**நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடையே புகைந்து கொண்டிருந்த உட்கட்சி விவகாரம், பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டதனால் கட்சியின் ஆதரவாளர்களிடையே பெரும் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.**

அதனால் சமூக வலைத்தலங்களில் கட்சித் தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஆவேசமாகக் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடு பட்டுவருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும்,

வேட்பாளர்கள் தமக்கிடையே குழுக்களை ஏற்படுத்தி கட்சியின் ஒற்றுமையைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் ஆளுக்காள் குத்துவெட்டு, குழி பறிப்புகளில் ஈடுபட்டு வருவதாகவும் பேசப்பட்டுவந்த நிலையில், நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தின் போது ஏராளமான பொது மக்கள் முன்னிலையில் வேட்பாளர் ஒருவர் நடத்தப்பட்டவிதம் தொடர்பில் கிசு, கிசுக்கள் எழுந்துள்ளன.

பிரதமர் ஹறிணி அமரசூரிய கலந்துகொண்ட மாபெரும் பரப்புரைக் கூட்டமொன்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் ஒருவர் கட்சிப் பிரமுகர்கள் ஒருசிலரால் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, வேறு சிலரால் மேடையில் இருந்து இறக்கப்பட்டு, பார்வையாளர் பகுதிக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இந்தச் சம்பவம் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் இணைந்ததாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் காணப்படும் நிலையில், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்குக் கிளிநொச்சியில் பரப்புரை மேடையில் இடம் மறுக்கப்பட்டமையானது அப்பட்டமான ஓரங்கட்டல் செயற்பாடு ஆகுமென்று ஆதரவாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2➤

## வாக்காளர் அட்டை கிடைக்காதவர்களைத் தபாலகங்களில் வந்து பெறக் கோரிக்கை!

கொழும்பு, நவ.05

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 07 ஆம் திகதி வியாழக்கிழமையுடன் நிறைவடையும் என்றும், அதன் பின்னர் வாக்காளர்கள் தத்தமது தபால் நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று வாக்காளர் அட்டைகளைப்பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தபால் மாஅதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ.எம். ஆர்.பி. சத்குமார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகப் பணி 67 வீதம் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்கள் ஆணைக் குழுவினால் 17.1 மில்லியன் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டன. அவற்றை உரியவர்களிடம் நேரடியாக விநியோகிக்கும் பணிகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இதுவரை சுமார் 11.4 மில்லியன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2➤

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய பிரதியமைச்சருக்குக் கடூழிய சிறை!

கொழும்பு, நவ 05

இலங்கை மின்சார சபையில் தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான சாந்த பண்டாரவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனையை உறுதி செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டு, இலங்கை மினசார சபையில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி பெண் ஒருவரிடமிருந்து

2➤

# திருமலையில் பெண்ணொருவர் படுகொலை சந்தேகத்தின் பேரில் உறவினர் ஒருவர் கைது!



*திருகோணமலை, நவ. 05*

*திருகோணமலையில் பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*திருகோணமலையில் தனியார்வைத்திய சிகிச்சை நிலையமொன்றை நடத்த வரும்வைத்தியர் ஒருவரின் மனைவியே இன்று காலை அத் தனியார் வைத்தியசாலையினுள் வைத்துப் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

2➤

## நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக இதுவரை ஆயிரத்து 642 முறைப்பாடுகள்!

கொழும்பு, நவ. 05

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக இதுவரை ஆயிரத்து 642 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. செப்டெம்பர் 26 ஆம் திகதி முதல் நேற்று 04 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே தேர்தல் ஆணைக்குழுவுக்கு இம்முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 386 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 206 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-12)





உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும், யாழ்ப்பாண நீரிழிவுக் கழகமும் இணைந்து விழிப்புணர்வுக் கருத்தரங்குத் தொடர்களை நடத்தி வருகின்றனர். இன்று காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கின் போது நீரிழிவு சிகிச்சை நிலையப் பொது வைத்திய நிபுணர் ம. அரவிந்தன் நீரிழிவு நோய் பற்றிச் சிறப்புரையாற்றினார்.
(படங்கள் : தி. மைக்கேல்)

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மழையுடனான வானிலையால் சிரமங்கள் ஏற்பட்ட போதிலும் அனைத்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளையும் உரியவர்களிடம் சேர்ப்பதற்கு அதிகபட்ச முயற்சிகளைத் தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது" என்று அவர் குறிப்பிட்டார்.

உரிய முகவரிகளில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் போது அவற்றைக் கையொப்பமிட்டு பெற்றுக்கொள்ளுமாறும், உரியவர்களால் பெற்றுக்கொள்ளப்படாத வாக்காளர் அட்டைகள் தபால் அலுவலகங்களில் வைக்கப்படும் எனவும்கூறிய அவர், எதிர்வரும் 07 திகதி முதல் தேர்தல் நடைபெறும் நாள் வரை அந்தந்தத் தபாலகங்களில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (இ-05)

## தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வளவு காலமும் வேட்பாளர்கள் பாரபட்சமான விதத்தில் நடத்தப்படுகிறார்கள், வேட்பாளர்களியே ஒற்றுமை இல்லை என்று பேசப்பட்டு வந்தாலும், ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் வேட்பாளர் ஒருவரை அவமதித்த விடயம், கட்சியின் உள்வீட்டு விவகாரத்தை வெளிச்சத்துக்குக் கண்டு வந்திருக்கிறது என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், வேட்பாளருக்கு ஆதரவானவர்கள் சமூக ஊடகங்களில் இது தொடர்பாக ஆவேசமான கருத்துக்களைப் பரிமாறி வருகின்றனர்.

இருந்தபோதிலும், கட்சி ஒழுங்குக்கமைய கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களை மட்டுமே மேடையில் அமர்த்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் பங்குபற்றுவது குறித்துத் தாங்கள் எந்தவிதமான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை என்றும் ஒழுங்கமைப்பாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலஞ்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐம்பதாயிரம் ஷரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான சாந்த பண்டாரவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

அந்த வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பிரதி அமைச்சருக்கு நான்கு வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தை ஆட்சேபித்து பிரதி அமைச்சர் சாந்த பண்டார மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான விசாரணைகளின் நிறைவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான்கள் ஆயம் குற்றத்தை உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது. (ஜ-06)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகொலை செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த 64 வயதான திருமதி ஏஞ்சலின் சுமித்ரா என்றும், கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் படுகொலை செய்யப்பட்டவரின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலீசார் தெரிவிக்கின்றனர்.

சடலம் மரண விசாரணைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருகோணமலை தலைமையகப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-03)

# வன்முறைக்குழு அடாவடி சொத்துக்களுக்குச் சேதம்!

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பல், வீட்டில் இருந்த சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்துக்கும் அதிகமானவர்களைக் கொண்ட வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களை அடித்து, நொருக்கிச் சேதப்படுத்தியதுடன், ஜன்னல் கண்ணாடிகள், மீன் தொட்டி, தையல் இயந்திரம் என்பவற்றையும் அடித்து உடைத்துச் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்துக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-07)





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# அமெரிக்க அதிபர் தேர்தலில் கமல ஹாரிசுக்கு அமோக வெற்றி என ஆய்வாளர்கள் ஆரூடம்!

அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறுகின்ற நிலையில், குடியரசுக்கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப்பை விட கூடுதல் வாக்குகளை ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் பெறுவார் என்று கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக, வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோது கமலா ஹாரிஸ் பின்தங்கியிருந்த நிலையில், படிப்படியாக ஆதரவு அதிகரித்துள்ளதாக கணிப்புக்கள் கூறுகின்றன.







இந்த தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியும் இந்திய வம்சாவளியுமான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து, குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் களமிறங்கியுள்ளார்.

ஆரம்பத்தில் டொனால்ட் டிரம்ப்பை எதிர்த்து களமிறங்கிய தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், போட்டியிலிருந்து ஜூலை 21ஆம் திகதியன்று விலகிக்கொண்டார்.

இதனையடுத்தே துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அவர், வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோது, டொனால்ட் ட்ரம்பைக் காட்டிலும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தார். இதன்படி 2024 ஜூலை 21ஆம் திகதி, டிரம்புக்கு ஆதரவாக 45 சதவீத வாக்காளர்களும், ஹாரிஸ்/க்கு ஆதரவாக 43 சதவீதம் பேரும் இருந்தனர்.

எனினும் அது ஜூலை 31ஆம் திகதி 44 சதவீதம், 43 சதவீதம்என அளவில் மாற்றம் அடைந்தது.

இந்தநிலையில் கடந்த முதலாம் திகதி நிலவரப்படி கமலா ஹாரிஸ்/க்கு 48 சதவீதம் பேரும், டொனால்ட் டிரம்புக்கு 47 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒரு குறிப்பிட்ட மாகாணங்கள், குறிப்பிட்ட கட்சிகளுக்கு மட்டுமே வாக்களிக்கும் நிலை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வருகிறது.

எனினும் 7 மாகாணங்களில் மட்டும் மக்கள் மாறி மாறி வாக்களிப்பார்கள். எனவே இந்த மாகாணங்களே புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அரிசோனா, ஜோர்ஜியா, வடக்கு கரோலினா மாகாணங்களில் டிரம்புக்கு 49 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். அதேநேரம் மிச்சிகன், விஸ்கான்சின் மாகாணங்களில் ஹாரிஸ/க்கு 49 சதவீதம் பேர் ஆதரவாக உள்ளனர்.

நெவேடா, பெல்சில்வேனியா மாகாணங்களில் இருவருக்கும் 48 சதவீதம் பேர் ஆதரவு தெரிவிப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.




## சீனிக்கான விசேட பண்ட வரி நீடிப்பு




கொழும்பு, நவ. 05

இறக்குமதி செய்யப்படும் சீனி கிலோவொன்றுக்கான 50 ஷரூபாய் என்ற விசேட பண்ட வரி விதிப்பு அரசாங்கத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வரி விதிப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடம் ஒன்றிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட பண்ட வரி கடந்த முதலாம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், வரி விதிப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)




# முயற்சி திருவினையாக்கும்

தோல்வி எனும் தடையை தாண்டி வெற்றிப்பாதையின் முதற்பயணமே முயற்சி ஆகும். முயற்சி உடையோர் தன்னுடைய குறிக்கோளை நோக்கிய பாதையில் எவ்விதமான இடைஞ்சல்கள் வந்தாலும் அதிலிருந்து விலக மாட்டார்கள். நாம் செய்யும் முயற்சிகள் தவறலாம் ஆனால் ஒரு போதும் முயற்சி செய்ய தவறக்கூடாது.

முயற்சியின் அவசியத்தை நாம் விளங்குவதற்காகவே வள்ளுவர் அவரின் பொன் மொழிகளில் ஒன்றான "முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" எனும் பொன் மொழியை தந்து சென்றுள்ளார்.

மனிதர்கள் மட்டுமல்லாமல் பூமியில் வாழும் மற்றைய உயிரினங்களும்கூட அதன் முயற்சியை நம்பிதான் உயிர் வாழ்கின்றன.

அதாவது எறும்புகள் தம் முயற்சியினாலேயே மழைக்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ உணவை சேமிக்கின்றன.

தேனிக்கள் தேன் கூடு கட்டுவது, சிலந்தி வலை பின்னுவது, குருவிகள் கூடு கட்டுவதும் முயற்சியின் சிறப்புக்களை மனிதராகிய நமக்கு கூறும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### முயற்சியின்மையின் இழிவு

முயற்சி செய்யாமல் வெற்றியை தொட்டவர் இவ்வுலகில் யாருமில்லை. முயற்சிக்காமல் இருப்பது குடும்ப வறுமையை தருவதோடு குடும்பத்திற்கு உள்ள மரியாதையையும் பெருமையையும் அழித்து விடும்.

தோல்வியையும் முயற்சியையும் அடைந்தவன் மட்டுமே வாழ்வில் முன்னேற முடியும். அந்த வகையில் முயற்சி செய்யாமல் இருப்பவன் முட்டாள்களுக்கு சமமாக கருதப்படு கின்றான்.

### உழைப்பால் உயர்ந்தோர்

நம் மனதில் இடம் பிடித்த சாதனையாளர்கள் எல்லாம் கடின முயற்சியால் வெற்றிப் பாதையை அடைந்தவர்களே. அந்த வகையில் தோமஸ் அல்வா எடிசன் 999 தடவை தோல்விகளை சந்தித்து 1000 வது தடவை தான் மின்குமிழை கண்டு பிடித்து இந்த உலகிற்கு வெளிச்சத்தை தந்தார்.



அதுபோலவே ஜமைக்கா நாட்டில் வறிய குடும்பத்தில் பிறந்த உசைன் போல்ட் அவரின் கடின முயற்சியால் 3 தடவைகள் தொடர்ச்சியாக ஒலிம்பிக்கில் தங்க பதக்கங்களை வென்றார். எவ்வளவு திறமை இருந்தாலும் சரியான முயற்சி இல்லாவிட்டால் வாழ்க்கையே புதிராய் போய்விடும்.

### முயற்சி தரும் படிப்பினைகள்

முயற்சி தரும் படிப்பினைகளாக நாம் பலவற்றை கூறலாம். தொடங்குவது மட்டுமல்ல வெற்றி அடையும் வரை ஓடுவதே முயற்சியாகும்.

பயத்தை தூக்கி எறிந்தால் தான் குறிக்கோளை அடைய முடியும். நெருப்பை மூட்டாமல் வெளிச்சம் வராது வியர்வை சிந்தாமல் என்றும் உயர்வு வராது. முயற்சி செய்தால் மட்டுமே உலகம் நம்மை உயர்ந்த இடத்தில் வைத்து நோக்கும்.

இதனால் தான் தோமஸ் அல்வா எடிசன் "முயற்சி என்னை கைவிட்டது ஆனால் முயற்சியை நான் கைவிட்டதில்லை" என கூறியுள்ளார்.

கடலின் அலைகள், பூமியின் சுழற்சி, சூரியனின் உதயம் இவையெல்லாம் எப்படி மாறுவதில்லையோ அது போலவே நாமும் முயற்சியை கைவிடாது போராடினால் ஒரு நாள் வெற்றி பெற முடியும்.

ஆகவே நாம் நம் மனதை கட்டுப்படுத்தி தியாக உணர்வோடு இலக்கை நோக்கி செல்வோம். சாதிப்போம்.


'எமது மக்களுக்கான எனது பணி மேலும் உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை 'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை 'வெற்றி' எனும் 3 எழுத்தை அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்
X
3


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு, பொருளாதார அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# அரச குடியிருப்புகளை ஒப்படைக்க தயங்கும் அரசியல்வாதிகள்

கொழும்பு, நவ. 05

முன்னாள் அமைச்சர்கள் உட்பட நான்கு முன்னணி அரசியல்வாதிகள் இதுவரை தமது அரசாங்க குடியிருப்புகளை ஒப்படைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நீதித்துறை, அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சின் அறிவிப்பின் படி இதுவரை ஒப்படைக்கவில்லை என கூறப்படுகின்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் மறைந்த சனத் நிஷாந்த, முன்னாள் இராஜாங்க அமைச்சர் மொஹான் பி டி சில்வா, முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகள் இதுவரை கையளிக்கப்படவில்லை.

மோகன் டி சில்வா பயன்படுத்திய குடியிருப்பு இன்று கையளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு வழங்கப்பட்ட குடியிருப்பில் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வசித்து வருவதாகவும், பல தடவைகள் அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட போதிலும், அவர்கள் இன்னும் அங்கேயே தங்கியிருப்பதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் அமைச்சின் செயலாளருடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு 7 பகுதியில் இந்த குடியிருப்புகளை அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பணமோசடி: வெளிநாட்டு பிரஜைகள் 500 பேருக்கு எதிராக விசாரணை

கொழும்பு, நவ. 05

இணையம் ஊடாக பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்த வெளிநாட்டு பிரஜைகள் 500 பேருக்கு எதிராக சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில் அவசர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் அறிவித்துள்ளது.

சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வந்து பல்வேறு இடங்களில் தங்கியிருந்த சீன, இந்திய, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாள பிரஜைகள் அடங்கிய குழு இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வாடகை அடிப்படையில் வீடுகளை பெற்றுக்கொண்டு மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த வெளிநாட்டுப் பிரஜைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுள்ளது.



மேலும், இந்த மோசடி நடவடிக்கைக்கு உதவிய இலங்கையிலுள்ள பல வங்கி அதிகாரிகளையும் கைது செய்ய விசாரணைகள் நடத்தப்படும் என குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வெளிநாட்டுப் பிரஜைகள், ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் டுபாய் ஆகிய நாடுகளில் உள்ள வங்கிக் கணக்குகளில் மோசடிகளில் ஈடுபட்ட பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)






# தாய் மற்றும் சகோதரிக்கு விரல்களை வெட்டி கொடூர செயல்



கொழும்பு, நவ. 05

மொனராகல, வெல்லவாய பிரதேசத்தில் மகன் தனது தாயின் கையின் மூன்று விரல்களை மன்னா கத்தியால் வெட்டி எடுத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

தாயின் விரல்களை வெட்டிய மகன் தனது சகோதரியையும் கத்தியால் தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களால் விரல்கள் துண்டிக்கப்பட்ட தாயையும், காயமடைந்த சகோதரியையும் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆபத்தான நிலையில் இருந்த தாய் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான மகன் வெல்லவாய பொலிஸாரால் கைது செய்யப்பட டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 30 வயதுடையவர் எனவும் அவர் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல்களுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை குறித்து ஜனாதிபதி விடுத்துள்ள எச்சரிக்கை



கொழும்பு, நவ. 05

அரிசியை கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரிசியின் விலை தொடர்பில் அரிசி ஆலையாளர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொனராகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கடந்த அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்யாமைக்காரணமாக, அரிசிவிலையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் எந்த வழியும் இருக்கவில்லை.

எனவே அரசின் நெல் கையிருப்புகளை விடுவிப்பது அல்லது சட்டங்களை இயற்றுவதன் மூலமோ அரிசி விலையை கட்டுப்படுத்துவது என்பனவே அரசாங்கத்திடம் உள்ள இரண்டு தெரிவுகளாகும் என்று அநுரகுமார குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், அரசிடம் நெல் கையிருப்பு இல்லாததால் அரசாங்கத்தால் சட்ட நடவடிக்கையைமட்டுமேமேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இதன்படி, எதிர்வரும்பெரும்போகத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (5)







# சுஜீவ சேனசிங்கவின் வீட்டில் திடீர் சோதனை



கொழும்பு, நவ. 05

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவின் (ஞரதநநறய ஞநயெளைபொந )கொள்ளுப்பிட்டியில் உள்ள வீட்டில்மேற்கொள்ளப்பட்ட சோதனை தொடர்பில் பொலிஸில் முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தான் வீட்டில் இல்லாத போது பொலிஸ் குழு என கூறிக்கொண்டு சிலர் தனது வீட்டை சோதனையிட்டதாக குற்றம் சுமத்தி சுஜீவ சேனசிங்கவினால் குருந்துவத்தை பொலிஸில் முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் உண்மையாகவே பொலிஸ் அதிகாரிகளா என்பதை கண்டறியுமாறும் முறைப்பாட்டின் மூலம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாணந்துறை வலன ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் சென்று இன்று அவசர சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்திய சீருடைகளின்பாகங்கள்மற்றும் வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என்பதைக்கண்டறியும்நோக்கில் சோதனை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அனுமதியின் அடிப்படையில், பொலிஸ் அதிகாரிகள் குழு சென்று சோதனை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகள் குழு வீட்டிற்குச் சென்றபோது சுஜீவ சேனசிங்க வீட்டில் இல்லை எனவும், வேலைக்காரர் மட்டும் இருந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

குறித்த தேடுதல் நடவடிக்கைகள் இரண்டு மணித்தியாலங்கள்மேற்கொள்ளப்பட்டதோடு ஊழியரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2024 இல் வெளியிடப்பெற்றது.